**ஜனவரி – 01**

# TNPSC துளிகள்

- திருவனந்தபுரத்தில் நடைபெற்ற 42-வது தேசிய அமைப்புகள் கருத்தரங்கின்போது இஸ்ரோவின் தலைவர் சிவனுக்கு தேசிய அமைப்புகள் தங்க விருதானது இந்திய அமைப்புகள் சமூகத்தினால் (SSI - Systems Society of India) வழங்கப்பட்டது.
  - இந்த விருதானது அமைப்பு அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் இவரது தலைசிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கிறது.
- இஸ்ரோ நிறுவனம் மாணவர்களுடன் இணைந்து, தனது திட்டமான அனைவரையும் சென்றடையக் கூடிய திட்டத்தின் ஒரு பகுதியாக "சம்வாத்" என்ற திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டமானது நாடெங்கிலும் உள்ள இளைஞர்களை விண்வெளி அறிவியல் தொடர்பான ஆராய்ச்சிகளில் ஈடுபடுத்துகிறது.
- ஹைதராபாத்தில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவரான பி.வி.ஆர். மோகன் தலைமையிலான குழுவானது 2020 ஆம் ஆண்டிலிருந்து புதிய கல்லூரிகளை அமைக்க அனைத்து இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (AICTE - All India Council for Technical Education) அனுமதிக்கக் கூடாது என்று பரிந்துரைத்துள்ளது.
- மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி (தனிப் பொறுப்பு) நடுத்தர வருவாய் ஈட்டும் பிரிவினருக்கான பிரதான் மந்திரி ஆவாஸ் திட்டம் என்ற PMAY (Pradhan Mantri Awas Yojana) கடன் மானியத்தை 2020 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.
- ரஃபேல் வரானே மற்றும் அண்ட்டோய்னி கிரீஸ்பேன் ஆகியோரை வீழ்த்தியதன் மூலம், 2018 ஆம் ஆண்டிற்கான பிரெஞ்சு விளையாட்டு வீரர் என்ற பட்டத்தை வளர்ந்து வரும் நட்சத்திர கால்பந்து வீரரான இலியன் பாபி வென்றுள்ளார்.
- மத்திய ஆசிய நாடுகளின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்தியாவிலிருந்து செய்யப்படவுள்ள முதலீடுகளின் பின்னணியில் உஸ்பெக்கிஸ்தான் நாடானது 2019 ஆம் ஆண்டை "நடப்பு முதலீடு மற்றும் சமூக வளர்ச்சிக்கான" ஆண்டாக அறிவித்துள்ளது.
- தமிழ்நாடு ஆளுநர் பன்வாரிலால் புரோகித் மதுரை காமராஜ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக கிருஷ்ணனை நியமித்தார். இவர் பதவியேற்றதிலிருந்து (ஜனவரி 1, 2019) மூன்று ஆண்டுகளுக்கு இப்பதவியில் நீடிப்பார்.
- 1988 ஆம் அண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் அணு ஆயுதங்கள் தொடர்பான தகவல்களைப் பரிமாறிக் கொண்டன.
  - இது இரு நாடுகளுக்கு இடையேயான 28-வது முறை நிகழ்ந்த தகவல் பரிமாற்றமாகும். முதன்முறையாக 1992 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி இருநாடுகளுக்கும் இடையே தகவல் பரிமாறப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## பீமா கொரிகன்

- 2019 ஆம் ஆண்டு ஜனவரி 01 அன்று மஹராஷ்டிராவின் புனேவில் உள்ள கொரிகன் பீமா கிராமத்தின் விஜய் ஸ்தம்பிற்கு (போர் நினைவகம்) மக்கள் வருகை தந்தனர்.
- 1818 ஆம் ஆண்டு ஜனவரி 01 அன்று பேஷ்வா படைகள் மற்றும் பிரிட்டிஷ் ஆகியோருக்கு இடையேயான போர், தலீத்துகளுக்கு மிக நெருக்கமான தொடர்பு கொண்ட பீமா கொரிகனில் சண்டையிடப் பட்டது.
- இந்த ஆண்டு (2019) பீமா கொரிகன் போரின் 201 வது ஆண்டைக் குறிக்கிறது.
- தலீத் வீரர்களை கொண்ட பிரிட்டிஷ் படையானது உயர் வகுப்பினரைக் கொண்ட பேஷ்வா படையுடன் போரிட்டது.
- பிரிட்டிஷ் படைகள் பேஷ்வா படைகளைத் தோற்கடித்தன.

## இந்தியப் பாலங்களுக்கான மேலாண்மை அமைப்பு

- மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலை மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்காரி இந்தியப் பாலங்களுக்கான மேலாண்மை அமைப்பை (IBMS - Indian Bridge Management System) தொடங்கி வைத்தார்.
- IBMS ஆனது நாட்டில் உள்ள அனைத்து பாலங்களின் பட்டியலை உருவாக்கவும் பாலங்களின் கட்டமைப்பு நிலைகளை மதிப்பிடுவதற்காகவும் மேம்படுத்தப்படுகிறது.
- IBMS ஆனது ஒரே உரிமையாளரால் நிர்வகிக்கப்படும் உலகின் மிகப்பெரிய தளமாகும். இது 1,50,000றkும் மேற்பட்ட பாலங்களுடைய கட்டமைப்புகளின் தகவல்களைக் கொண்டிருக்கும்.
- இந்த பட்டியல் தயாரிப்பின் போது ஒவ்வொரு பாலத்திற்கும் குறிப்பிட்ட மாநிலம், சாலைப் போக்குவரத்து அலுவலக மண்டலம், தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை அல்லது மாவட்ட சாலை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு தனித்துவ அடையாள எண் அல்லது தேசிய அடையாள எண் வழங்கப்படும்.
- புவியிடங்காட்டியின் (GPS) மூலம் அட்சரேகை மற்றும் தீர்க்க ரேகை ஆகியவற்றின் அடிப்படையில் பாலங்களின் இடம் கண்டறியப்பட்டு, பாலங்களுக்கு பால இருப்பிட எண் வழங்கப்படும்.

## உஜ்வாலா துப்புரவுத் துணிகள் முன்னெடுப்பு

- புவனேஸ்வரில் மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் உஜ்வாலா துப்புரவுத் துணிகள் என்ற முன்னெடுப்பைத் தொடங்கி வைத்தார்.
- ஒடிசா மாநிலத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் பெண் குழந்தைகளுக்கு இலவசமாக துப்புரவுத் துணிகள் வழங்கும் குஷி திட்டத்திற்கு நிகராக மத்திய அரசின் இந்த திட்டம் செயல்படும்.
- இந்த புதிய திட்டமானது பெண்கள் சுகாதார வசதிகளை அணுகுவதை

அதிகப்படுத்தவும் மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## சீன பண மதிப்பில் “பாண்டா பத்திரங்கள்” - பாகிஸ்தான்

- சீனாவின் மூலதனச் சந்தையிலிருந்துக் கடன்களைத் திரட்டுவதற்காக முதன்முறையாக ரென்மின்பி என்ற பணத்தின் மதிப்பிலான பத்திரங்களை (பாண்டா பத்திரங்கள்) வழங்க பாகிஸ்தான் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இதன் மூலம், அமெரிக்காவின் டாலர் மதிப்பிற்கு நிகராக சீனாவின் பண மதிப்பைப் பயன்படுத்துவதற்காக பாகிஸ்தான் ஒரு படி முன்னோக்கி நகர்ந்துள்ளது.
- இந்த பத்திரங்கள், மூலதனச் சந்தை திரட்டு முதலீட்டாளர் அடிப்படையை விரிவுபடுத்தவும் சீனாவின் பணமதிப்பான ரென்மின்பியின் மதிப்பை உயர்த்துவதற்கு ஒரு ஆதாரமாகவும் அரசாங்கத்திற்கு உதவுகின்றது.
- இதனை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெய்ஜிங்குடனான விரிவான வர்த்தகப் பற்றாக்குறைக்கு பாகிஸ்தான் நிதியளிக்க முடியும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## 2019 ஆம் ஆண்டிலிருந்து உடல் ஸ்கேன் கருவிகள்

- அடுத்த ஆண்டிலிருந்து நாடெங்கிலும் உள்ள விமான நிலையங்களில் உடல் ஸ்கேன் கருவிகள் அமைக்கப்படவிருக்கின்றன.
- நாடெங்கிலும் விமான நிலையங்களில் உள்ள முழு உடல் ஸ்கேன் கருவிகள் “மில்லிமீட்டர் அலை” (Millimetre Wave) இயந்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- இது சந்தேகத்திற்கிடமான பொருள் இருக்கும் இடத்தை அசைவூட்டப் படத்தின் மூலம் குறிப்பிட்டுக் காட்டுவதற்காக பயணியின் மீது மின்காந்த அலைகளை செலுத்துகின்றது.
- மேலும் விமானப் போக்குவரத்திற்கான பாதுகாப்பு அமைப்பானது (Bureau of Civil Aviation Security - BCAS) இந்த கருவிகளை அமைப்பதற்கான தொழில்நுட்ப விவரங்களைத் தரவிருக்கிறது. நாடெங்கிலும் எந்தெந்த விமான நிலையங்களில்

இந்த கருவிகள் அமைக்கப்படும் என்றும் இது கூறவிருக்கிறது.








## தாய்ஜினோமிக்ஸ் (தாய் மரபியல்)

- மைக்ரோசாப்ட் அசூரின் க்ளவுட் கம்ப்யூட்டிங் (மேகக் கணினி) மற்றும் சேமிப்பு வசதிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி "தாய்ஜினோமிக்ஸை" மைக்ரோசாப்ட் மற்றும் தாய்வானின் செயற்கை நுண்ணறிவு ஆய்வகங்கள் இணைந்து கண்டுபிடித்துள்ளன.
- இது ஒரு செயற்கை நுண்ணறிவு (AI – Artificial Intelligence) சார்ந்த மரபணு பகுப்பாய்வுத் தளமாகும்.
- இந்த தளமானது நோயாளிகள் மற்றும் மருத்துவமனைகளால் வழங்கப்படும் மருத்துவம் மற்றும் மரபணு தரவுகளின் பரந்த அளவிலான அளவீடுகளைச் செயல்படுத்த, ஆய்வு செய்ய மற்றும் பகுப்பாய்வு செய்வதற்காக செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகிறது.
- தாய்ஜீனோமிக்ஸானது நோய்களை மருத்துவர்கள் திறம்பட கண்டறிய உதவுவதன் மூலம் மனிதத் தவறுகளைக் குறைக்க உதவுகின்றது.

## சாங்'இ - 4 விண்கலம்

- சாங்'இ-4 விண்கலமானது முதன்முறையாக நிலவின் மறுபுறத்தில் மெதுவாகத் தரையிறங்க ஆயுத்தமாவதற்காக ஒரு திட்டமிடப்பட்ட சுற்றுவட்டப் பாதையில் நுழைந்திருக்கின்றது.



- இந்த விண்கலமானது முதன்முறையாக நிலவின் மறுபகுதியான இருண்ட பகுதியில் தரையிறங்குவதற்கான நிலைக்கு நகர்ந்துள்ளது.
- சீன நாடானது டிசம்பர் மாதம் 08 ஆம் தேதியன்று லாங் மார்ச் - 3பி என்ற செலுத்து வாகனத்தின் மூலம் சாங்'இ-4 என்ற விண்கலத்தை விண்ணில் செலுத்தியது.
- நிலவின் மறுபுறத்தில் இந்த விண்கலத்தின் மெதுவான தரையிறக்கமானது மிகவும் சவாலானது. ஏனெனில் விண்வெளி ஓடம் மற்றும் பூமி ஆகியவற்றிற்கு இடையேயான ஏதேனும் நேரடித் தொடர்பானது நிலவின் மற்ற அரைக் கோளத்தினால் தடுக்கப்பட்டு விடும்.
- இந்த பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காக சீன நாடானது, "கியூகியோ" அல்லது "மேக்பை பாலம்" என்ற ரிலே செயற்கைக் கோளை விண்ணில் செலுத்தியுள்ளது.

## அரிய வகை செல்லைக் கண்டறிவதற்கான நெறிமுறைகள்

- டெல்லியில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மிகப் பெரிய செல் குழுக்களிலிருந்து சில விநாடிகளில் அரிய வகை செல்லைக் கண்டறிவதற்கான நெறிமுறைகளை உருவாக்கியுள்ளனர்.
- அரிய வகைப் பொருள்களைக் கண்டுபிடிக்கும் வழிமுறையானது 20000 செல்களின் சுய வெளிப்பாட்டு விவரத்தை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு செல்லிற்கும் ஒரு மதிப்பை அளிக்கிறது.
- ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் மதிப்பைப் பெற்ற செல்கள் அரியவகை செல்களாகக் கருதப்படும்.
- இந்த புதிய நெறிமுறையானது ஏற்கெனவே உள்ள முறைகளுடன் ஒப்பிடப்படும் போது மேம்பட்ட உணர்திறன் மற்றும் தனித்தன்மை ஆகியவற்றைக் கொண்டதாகும்.

## பேக்பஜார் - ஓ - ரசகுல்லா உத்சவ்


- ரசகுல்லா கண்டுபிடிப்பின் 150-வது ஆண்டைக் குறிப்பதற்காக கொல்கத்தாவின் பேக்பஜாரில் "பேக்பஜார் - ஓ - ரசகுல்லா உத்சவ்" என்ற 3 நாள் திருவிழாவானது கொண்டாடப்பட்டது.
- இத்திருவிழாவின் போது ரசகுல்லாவைக் கண்டுபிடித்தவரான நபின் சந்திர தாஸின் உருவச்சிலை மற்றும் அஞ்சல் தலை ஆகியவை வெளியிடப்பட்டன.

## நியூ ஹாரிசான் விண்கலம்

- நாசாவின் நியூ ஹாரிசான் விண்கலமானது பூமியிலிருந்து 4 பில்லியன் மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ள மர்மமான கோளான அல்டிமா துலேவை ஆய்வு செய்யும் முதலாவது விண்கலமாக உருவெடுத்துள்ளது.
- இது மிகவும் பழமையான மற்றும் மனித குலத்தால் இதுவரை ஆய்வு செய்யப்படாமல் இருந்த அண்டப் பகுதி மற்றும் வெகு தொலைவில் உள்ள இலக்கு ஆகியவற்றை ஆய்வு செய்து வரலாற்றுச் சாதனை படைத்த ஒரு விண்வெளித் திட்டமாகும்.

### ***அல்டிமா துலே***

- அல்டிமா துலேவானது நெப்டியுனின் சுற்றுவட்டப் பாதைக்கு அப்பால் சூரியக் குடும்பத்தின் வெளிப்புறத்தில் அமைந்துள்ள குய்ப்பர் பட்டையில் (Kuiper belt) அமைந்துள்ளது.
- இது சுமார் 30 கிலோ மீட்டர் விட்டத்தையும் ஒரு ஒழுங்கற்ற வடிவத்தையும் கொண்டுள்ளது.
- அல்டிமா துலேவானது பல பில்லியன் ஆண்டுகளாக சூரிய ஒளியிலிருந்து வெளிப்படும் ஹைட்ரோ கார்பனின் வெளிப்பாட்டின் காரணமாக சிவப்பு நிறத்தில் உள்ளது.
- அல்டிமா துலேவானது "கூல் கிளாசிகல்ஸ்" என்று அழைக்கப்படும் "குய்ப்பர் பட்டை" வகைப் பொருட்களின் ஒரு வகையைச் சார்ந்தது ஆகும். இந்த "கூல் கிளாசிகல்ஸானது" சூரிய சுழற்சிக்கான குறைவான சாய்வுகளுடன் ஒரு வட்டமான சுற்றுவட்டப் பாதையைக் கொண்டுள்ளது.




- - - - - - - - - - - - - -